2016 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2016) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

நீங்கள் எவ்வளவுதான் சத்தம் போட்டாலும் அது அவைக் குறிப்பிற்கு வராது. நீங்கள் அமைதியாக இருந்து அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள்.

(ஓ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2016), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2016)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்பதை ஒரே வார்த்தையில் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, சரி. உட்காருங்கள்.

திரு. கரி. இராமசாமி: உடனே உட்காரச் சொன்னால் எப்படி? இரண்டு வார்த்தைகள்கூட பேசாமல் எப்படி உட்காருவது? இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டால் பல ஊழல்களுக்கு வித்திடக்கூடிய நிலை ஏற்படும் என்று நாங்கள் கருதுகிறோம். குதிரை பேரம் இதிலே நடைபெறும் என்று நாங்கள் கருதுகிறோம். இதனால்

@ 29–8–2016 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2016 செப்டம்பர் 2] [*திரு. கரி. இராமசாமி*]

இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் நிறைவேற்றக் கூடாது. இது மிகப் பெரிய தவறுகள் ஏற்பட வழிவகுக்கும். இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் திரும்பப் பெற வேண்டுமென்று நான் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் எல்லோரும் எனக்கு நிறைய ஒத்துழைப்புக் கொடுத்து விட்டீர்கள். (குறுக்கீடுகள்) போதும். ரொம்ப நன்றி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இதுமாதிரி எல்லா சட்டமுன்வடிவுகளுக்கும் ஒத்துழைப்புக் கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். நீங்கள் இதுவரையில் ஒத்துழைப்புத் தராததற்கு எனது கண்டனத்தைத் தெரிவிக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் பேசுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 75 ஆண்டு காலமாக தமிழ்ச் சமுதாயத்தின் உயர்வுக்காக ஓய்வின்றி உழைத்துவரும் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) உழைப்பால், தியாகத்தால் உயர்ந்து நிற்கின்ற நமக்கு நாமே நாயகர் எங்கள் தளபதி அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் செய்தீர்கள். அவர்கள் திரும்ப செய்கிறார்கள். நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள்.*

பிற்பகல் 2–55

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி, நகராட்சி, பேரூராட்சி அடங்கிய தேர்தல் நேரடித் தேர்தல், மறைமுகத் தேர்தல் என்ற காரணத்தினால், இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை ஜனநாயகத்திலே, 50 சதவிகித இடஒதுக்கீட்டை பெண்களுக்கென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். 2001–ன் மக்கள் தொகை அடிப்படையிலே இந்தத் தேர்தலை நடத்தப்போகிறீர்கள். 2011–லே மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்து விட்டது. மத்திய சர்க்கார் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தியிருந்தாலும், மாநில சர்க்கார்தான் மக்கள் தொகை கணக்கெடுப்பை எடுத்துக் கொடுத்தது. 2013–லே, தமிழக அரசுதான் இதை மத்திய அரசாங்கத்திடம்*

ஒப்படைத்திருக்கிறது. மூன்று ஆண்டுகள் கழித்து, இப்பொழுது என்ன நிலைமை என்று கேட்டால், தாம்பரத்திலே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 32 ஆவது வட்டத்திலே, 10 ஆயிரம் வாக்காளர்களுக்கு மேல் இருக்கின்றார்கள். அதுபோல், பெருங்களத்தூர் பேரூராட்சியிலே, 15 ஆவது வட்டத்திலே 11 ஆயிரம் வாக்காளர்களுக்கு மேல் இருக்கின்றார்கள். மேடவாக்கம் ஊராட்சியை எடுத்துக்கொண்டால் 1 ஆவது வார்டிலே மட்டும் 10,900 வாக்காளர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்த சட்டத் திருத்தத்தை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்று இரண்டே வரிகளில்கூட சொல்லலாம். (குறுக்கீடுகள்) நேரம் இல்லை. வேறு அலுவல்கள் இருக்கின்றன. நீங்கள் சொல்லி முடியுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லி முடியுங்கள். நிறைய நீங்கள் ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதையெல்லாம் அனுமதிக்க முடியாது. எனக்கு நீங்கள் முழு ஒத்துழைப்புத் தரவில்லை. சட்டத் திருத்தத்தைப் பற்றிய கருத்து என்னவென்று சொல்லுங்கள், அவ்வளவுதான். நீண்ட விவாதம் செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) நீண்ட விவாதத்திற்கு அனுமதி இல்லை. சுருக்கமாகச் சொல்லுங்கள். உட்காருங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, பேசுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1969–லே மறைமுகத் தேர்தல். 1986 இல் நேரடித் தேர்தல், 1996 இல் நேரடித் தேர்தல், 2001 இல் நேரடித் தேர்தல், 2006 இல் மறைமுகத் தேர்தல் நடைபெற்றது. இன்றைக்கு என்ன நிலைமை என்று சொன்னால், பொதுமக்களுக்கு பணியாற்றுவதில் கடுமையான பணி யாருக்கு என்று சொன்னால், உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்குத்தான். அதிலும் குறிப்பாக, பெண்களுக்கு.

2016 செப்டம்பர் 2] [திரு. எஸ்.ஆர். இராஜா]

ஏற்கெனவே 1996–லே 10 வார்டுகளுக்குத் தேர்தல் முடிந்துவிட்டது. 2006–லே 10 வார்டுகளுக்குத் தேர்தல் முடிந்துவிட்டது. உங்களுடைய சட்டத்தின் அடிப்படையில் பார்த்தால், இப்பொழுது மீதியிருக்கிற 10 வார்டுகளில் பெண்களுக்கு ஒதுக்கீடு இல்லை என்ற நிலைதான் உங்கள் சட்டத்திலே இருக்கின்றது. ஆகவே, பெண்களுக்குண்டான உரிமையை பெற்றுத் தருவதில் திராவிட முன்னேற்றக் கழகம் எப்படிப் போராடுகிறதோ, அதுபோல், மாற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். வார்டுகளைப் பிரிப்பதில் பெரிய கஷ்டம் ஒன்றும் கிடையாது. ஆக 2 வார்டு. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும் உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கொஞ்சம் விளக்கமாகச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–லே (குறுக்கீடுகள்) இதேபோல் அவர்களுடைய ஆட்சியிலே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இவ்வளவு நாள் கொறடாவாக இருந்திருக்கிறீர்கள். விவரம் தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னால் முந்திரிக்கொட்டை மாதிரி எதாவது பேசிக்கொண்டிருக்கிறீர்களே? (குறுக்கீடுகள்) அது சரியல்ல. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–லே (குறுக்கீடுகள்) இதேபோல் அவர்களுடைய ஆட்சியிலே மறைமுகத் தேர்தல் நடந்தது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: இன்றைக்கு 2011 census பற்றிப் பேசினார்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு மத்திய அரசாங்கம் சட்டமன்றத் தொகுதியை வரைமுறைப்படுத்தினாலும்கூட, தொகுதி எண்ணிக்கையை அதிகரிக்கவில்லை. அது அவர்கள் எல்லோருக்கும் நன்றாகவே தெரியும். 234 தொகுதிகளும் அப்படியே இருக்கின்றன. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.

பிற்பகல் 3–00

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: ஆகவே உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டினை 33 சதவிகிதமாக உயர்த்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டினை மாண்புமிகு அம்மா அவர்கள் 50 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பிறகு எப்படி பெண்களுக்கு வாய்ப்பு இல்லை என்று சொல்கிறீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்தான் 50 சதவிகிதம், அதாவது பாதிக்குப் பாதி பெண்களுக்குக் கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சொல்கிறமாதிரி வார்டுகளை வரையறை செய்வதால் வார்டுகள் கூடுதலாகப் போவதில்லை. அதுதான் சூழ்நிலை. அதேபோல, நம்முடைய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் பேசினார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், அன்றைக்கு மாநகராட்சிச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, நீங்கள் பேசும்போதுகூட, பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் கொண்டு வரவேண்டுமென்று நீங்களே கேட்டீர்கள். இன்றைக்கு நீங்களே எதிர்க்கிறீர்கள். இந்தச் சூழ்நிலையில், மக்களுடைய கோரிக்கையை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், அரசியல் ஆர்வலர்கள் எல்லோரும் கொடுத்தால், உடனடியாக மக்களுக்காக நிறைவேற்றக்கூடிய அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. அம்மா அவர்களும் அன்றைக்குச் சொன்னார்கள். எந்தக் கோரிக்கையாக இருந்தாலும் அந்தச் சூழ்நிலையைப் பொறுத்து நிறைவேற்றி வருகிறார்கள். (குறுக்கீடுகள்) ஆகவே, பொதுமக்கள், தன்னார்வத் தொண்டு

2016 செப்டம்பர் 2] [திரு. எஸ்.பி. வேலுமணி]

நிறுவனங்கள், குடியிருப்பு நலச் சங்கங்கள் இவையெல்லாம் பல கோரிக்கைகளைக் கொடுத்திருப்பதனால், இன்றைக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மாநகராட்சி மேயர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும்போது, சில முக்கிய நேர்வுகளில் முடிவெடுக்கும்போது, மேயர்கள் தனியாகவும், பெரும்பாலான வார்டு உறுப்பினர்கள் தனியாகவும் செயல்படுகின்ற நிலைமை ஏற்பட்டு, மக்கள் நலப் பணிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினர் ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்படும்போது, அவர் உறுப்பினர்களின் பேராதரவுடன் சிறந்த முறையில் பணியாற்றவும், மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தவும் நல்வாய்ப்பு ஏற்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு கருதுகிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

அதனால்தான் 2016 ஆம் ஆண்டு, மாநகராட்சி திருத்தச் சட்டம் 23–6–2016 அன்று இயற்றப்பட்டது. தமிழகத்தில் உள்ள சமூக ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டு அமைப்புகள், பொது நலச் சங்கங்கள் மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாநிலத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஒரே சீரான தேர்தல் நடைமுறைகளைப் பின்பற்றும் பொருட்டு, மன்ற உறுப்பினர்கள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தலைவராக, அவர்களுக்குள்ளேயே ஒருவரை நேரடியாகத் தேர்ந்தெடுப்பது மிகவும் நன்மை பயக்கும் எனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கருதுகிறது. தற்போது, அஸ்ஸாம், பஞ்சாப், பீகார், டெல்லி, குஜராத், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, மகாராஷ்ட்டிரம், ஒடிசா, சிக்கிம், கோவா, ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் மறைமுகத் தேர்தலின் மூலமாகத்தான் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் மன்ற உறுப்பினர் ஒருவர் தலைவராகத் தேந்தெடுக்கப்படும்போது, அவர் உறுப்பினர்களின் பேராதரவுடன் சிறந்த முறையில் பணியாற்றிட நல்வாய்ப்பு ஏற்படும் என மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருதுகிறது. அங்குள்ள

பிரச்சினைகள், அடிப்படை பிரச்சினைகள் எல்லாம் அவருக்குத் தெரியும். ஆகவே, மக்கள் நலப் பணிகள் சிறப்பாக நடைபெறவும், மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், இந்தச் சட்டத் திருத்தம் மிகவும் அவசியம் என்பதால், இச்சட்டமுன்வடிவை நீங்கள் அனைவரும் நிறைவேற்றித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) என்ன? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் எதிர்க்கிறேன் என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) சரி, எதிர்க்கிறேன் என்று சொல்வதை பதிவு செய்து கொள்ளலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கிறோம் என்று சொல்லிவிட்டீர்கள், இல்லையா? நான் அதைப் பதிவு செய்து விட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பதிவு செய்து விட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் எதிர்க்கிறேன் என்று சொன்னதை நான் பதிவு செய்து விட்டேன். (குறுக்கீடுகள்) பதிவு செய்வதாக நானும் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) போதும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள், உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற 'டிவிஷன்' கேட்கிறீர்கள். ஆனால், இந்த அவையிலே குரல் வாக்கெடுப்பே போதும். (குறுக்கீடுகள்) ஏனென்று சொன்னால், ஆளுங்கட்சியில் அதிகமான உறுப்பினர்கள் இருக்கிற காரணத்தினால், ஆளுங்கட்சி கொண்டு வருகிற இந்தத் தீர்மானம் நிறைவேறும் என்கிற காரணத்தினாலே, இதைக் குரல் வாக்கெடுப்பிற்கு விட்டு, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்று என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன்.

(திரு. துரைமுருகன், பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே வந்தார்.)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

2016 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 19 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 19 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

(எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலினும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களில் சிலரும் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் நின்று கொண்டு சட்டமுன்வடிவின் நகலை கிழித்தெறிந்தனர். பின்னர், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கோஷமிட்டுக்கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)

நீங்கள் இன்றைக்கு செய்கிற இவ்வளவு காரியங்களையும் நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். நீங்கள் சட்டத்தை எவ்வளவு மதிக்கிறீர்கள், சட்ட விதிகளை எப்படி மதிக்கிறீர்கள் என்பதை நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், தெரிந்துகொள்வார்கள். நீங்கள், இவ்வளவு மோசமாக நடப்பதை நான் கடுமையாக, வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

[பேரவைத் தலைவர்] [2016 செப்டம்பர் 2

பிற்பகல் 3–05

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2016) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஔ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2016), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,